சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **226 / 2021**

பெயர்: நாகரத்தினம் பி.வா.சா. 1 தேதி **16.02.2026**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனது சொந்த ஊர் தண்ணீர்பள்ளி. எனக்கு கோபாலகிருஷ்ணன் மகன் வெங்கடேஷ் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வெங்கடேஷ் என்பவரின் அக்கா மகனான வாதியை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வெங்கடேஷ்க்கும், எனக்கும் வரவு செலவு உண்டு. மேற்படி வெங்கடேஷ் என்பவர் தான் வாதியிடம் பணம் வாங்கி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வெங்கடேஷ்ரிடம் எவ்வளவு கடன் வாங்கினேன் என்றால் ஈட்டு கடனாக ரூ.5,00,000/- வாங்கினேன். எந்த ஆண்டு வாங்கினேன் என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு சொந்தமாக நிலம் இல்லை வீடு உள்ளது. எதற்காக கடன் வாங்கினேன் என்றால் எனது மனைவிக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்திற்காக பணம் வாங்கினேன். எனக்கும், மேற்படி வெங்கடேஷ்-க்கு நிறைய நாள் பழக்கம் உண்டா என்றால் ஒரே தெருவில் வசித்து வருகிறோம். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா-ஆ.1 புரோ நோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. மேற்படி கையெழுத்து என்னுடையது இல்லை என்கின்ற விவரத்தை முதல் விசாரணையிலோ, எதிர்வழக்குரையிலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையில் பூர்த்தி செய்யப்படாத புரோ நோட்டில் தான் கையெழுத்து செய்தாக கூறியுளேன் என்றால் இல்லை. எதிர்வழக்குரையில் உள்ள சங்கதியை தெரியுமா என்றால் படித்து பார்த்தால் தான் சொல்லமுடியும். முதல் விசாரணையில் உள்ள சங்கதி தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

2. நான் ரூ.4,00,000/- கடன் வாங்கவில்லை ரூ.1,00,000/- தான் கடன் பெற்றுள்ளேன் என கூறியுள்ளேனா என்றால் ரூ.1,00,000/- முன்பணம் வாங்கியிருந்தேன், ஆனால் ரூ.5,00,000/-த்திற்கு ஈட்டுகடனுக்காக ரிஜிஸ்டர் பத்திரம் எழுதிக்கொடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் நான்குவருடங்களுக்கு முன்பு அவசர நிமிர்த்தம் வைத்திய செலவிற்காக ரூ.1,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்யப்படாத புரோ நோட்டை கையெழுத்து செய்து கொடுத்தியிருந்தேன் என கூறியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. வாதியிடம் பெற்ற கடனை திரும்ப செலுத்தக்கூடாது என்பதற்காக சங்கதிகளை மாற்றி மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வக்காலத்து மற்றும் எதிர்வழக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா-ஆ.1 புரோ

நோட்டில் உள்ள கையெழுத்திற்கும், வக்காலத்தில் உள்ள கையெழுத்திற்கும் என்ன வித்தியாசம் என்றால் S மாறுதலாக உள்ளது. வாதியிடம் பெற்ற கடனை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. வா.சா-ஆ.1 புரோ நோட்டில் கண்டுள்ள தொகையினை நான் சாட்சிகள் முன்பு பெற்றுக்கொண்டு அதற்காக புரோ நோட்டை எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி என்னிடம் காண்பிக்கப்படும் புரோ நோட்டில் உள்ள கையெழுத்து செய்ததாக வாதி கூறக்கூடிய சமயத்தில் சாட்சிகள் இல்லை என்றால் புரோ நோட்ல் உள்ள கையெழுத்தே என்னுடையது அல்ல. இந்த கடனை தவிர வேறுயாரிடமும் நான் கடன் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. என்மீது சொத்து வழக்குகள் எதுவும் உள்ளதா என்றால் என் மகன் மீது தான் உள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வாதி எனக்கு அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். அதற்கு பதில் அறிவிப்பு நான் கொடுக்கவில்லை. நான் மேற்படி வாதியின் மீது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. வாதியிடம் பெற்ற கடனை ஏமாற்றவேண்டும் என்பதற்காக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் பெற்ற கடனை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.16 17:06:08 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.